# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2011 ஜனவரி திங்கள் 31.01.2011–ம் நாள் திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறுற்றது

**முன்னிலை**

திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

பொருள் எண் : 1

இந்நகராட்சி பணியாளர்கள் அலுவலகப் பணியாளர்கள் வெளியூர் சென்ற பயணஙகளுக்கான பயணப்படித் தொகை ரூ.16,258/–ஐ கீழ்காணும் விவரஙகளின்படி வழஙக மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.கே.யு. சிந்தாமதார் | மேலாளர் | 11/2010<br>12/2010 | 898/–<br>2118/– |
| 2 | திரு.வெ.கண்ணையா | நகராட்சி பொறியாளர் | 10/2010<br>11/2010<br>12/2010 | 1955/–<br>2997/–<br>1898/– |
| 3 | திரு.பி.செல்வம் | துப்புரவு அலுவலர் | 1/2011 | 2087/– |
| 4 | திரு.பி. வீரமணி | சுகாதார ஆய்வாளர் | 11/2010 | 942/– |
| 5 | திருமதி.ஆர்.கீதா | நகரமைப்பு ஆய்வர் | 11/2010<br>12/2010 | 842/–<br>670/– |
| 6 | திருமதி.கே. மீனாம்பாள் | மகப்பேறு ஆயா | 11/2010<br>12/2010 | 219/–<br>292/– |
| 7 | திரு.ச. ராமு | அலுவலக உதவியாளர் | 11/2010<br>12/2010<br>1/2011 | 450/–<br>356/–<br>534/– |
| | | **மொத்தம்** | | **16258/–** |

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.130/2010/எச்1)

**தீர்மானம் எண். 1576 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 2

அரசாணை (நிலை) எண்.293, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள் 26.11.2010 மற்றும் சென்னை உயர்நீதிமன்ற ஆணை நாள் 20.11.2008 (வழக்கு எண்.24403/2008 ) ஆகியவற்றின்படி, நகராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் இனிவரும் காலஙகளில் பாதாள சாக்கடை அடைப்புக்கள் அல்லது நச்சுத் தொட்டிகள் சுத்தம் செய்வதற்கு மனிதர்களை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது தொடர்பான விழிப்புணர்வை பொது மக்களுக்கு ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் நே.மு.க. எண்.30335/2009/பாசாதி–2, நாள் 16.12.2010–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மேற்படி பொருள் தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் நோக்கில் தினசரி பத்திரிகைகளின் வாயிலாக விளம்பரம் செய்த வகையில் கீழ்காணும் விவரப்படி பட்டியல்கள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| (1) தினத்தந்தி நாளிதழ் | – | ரூ. 1,120/– |
| (2) KAL Publications (P) Ltd. (தினகரன் நாளிதழ்) | – | ரூ. 1,200/– |
| **மொத்தம்** | **–** | **ரூ. 2,320/–** |

எனவே மேற்காணும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்ததற்கும், பட்டியல் தொகை ரூ. 2,320/– ஐ சம்மந்தப்பட்ட பத்திரிகை நிறுவனங்களுக்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகுவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.எச்1/4596/2009)

**தீர்மானம் எண். 1577 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 3

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.139/2011/J2 நாள் 05.01.2011 மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ஆர்.எண்.143478/SBH1/S1/2010 நாள் 09.12.2010 ஆகியவற்றில் உச்சநீதி மன்ற உத்தரவின்படியும், இந்திய நிர்வாக பதிவாளர் அவர்களின் (அரசு கடித எண்.07.01.2009–VS(CRS) நாள் 24.11.2010 of DRG New Delhi ) வழிகாட்டுதலின்படியும், பிறப்பு இறப்பு சான்றிதழ்களில் தேசிய முத்திரை சேர்க்கப்பட்டு வழஙகப்பட வேண்டும் என தெரிவித்து அதற்கான திருத்தியமைக்கப்பட்ட மாதிரி பிறப்பு இறப்பு சான்றிதழ் படிவஙகள் உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/3510/2009)

**தீர்மானம் எண். 1578 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 4

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு (துப்புரவு அலுவலர் மற்றும் மகப்பேறு உதவியாளர்), இ1 (பொறியியல் பிரிவு) மற்றும் நகரமைப்பு பிரிவு (நகரமைப்பு ஆய்வாளர்) கோப்புகளை பராமரிப்பதற்கு தேவையான 6 1/2’ x 3’ அளவு ஸ்டீல் பீரோக்கள் 4 எண்ணஙகளை The Kanyakumari District Small Scale Engineering Service Industrial Co-operative Society Ltd., Konam, Nagercoil நிறுவனத்திடமிருந்து பீரோ ஒன்றிற்கு ரூ.12,000/– மதிப்பீட்டில் வாஙகுவதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.48,000/–ஐ SJSRY திட்டம் 2009–10 மற்றும் 2010–11–ம் வருட A&OE பிரிவின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.எச்1/1871/2010)

**தீர்மானம் எண். 1579 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 5

இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.சிவதாணுமாலையன், சாஸ்தான்கரை ரோட்டில் வடிகால் ஓடை கட்டிய வகையில் பில்லில் பிடித்தம் செய்த வைப்புத் தொகை 1% ரூ.1000/– காலங்கடந்த வைப்பு தொகையில் இருப்பில் உள்ளது. மேற்படி தொகை வழங்குவது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.சி1/6423/2010)

**தீர்மானம் எண். 1580 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 6

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிக்கை நாள் 25.08.2010 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.186/10/சி2 நாள் 13.12.2010 ஆகியவற்றில் மே 2003–ம் வருடத்திற்கு முந்தைய நகராட்சிகளின் பிறப்பு இறப்பு பதிவுகள் அனைத்தும் பொதுமக்கள் பார்ப்பதற்கு ஏதுவாக இணையதளத்தில் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் பதிவு செய்யப்பட வேண்டியுள்ள மே 2003–ம் வருடத்திற்கு முந்தைய பிறப்பு இறப்பு விவரங்கள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1) பிறப்புக்கள் | : | 44808 |
| 2) இறப்புக்கள் | : | 6220 |
| 3) இறந்து பிறந்தவை | : | 330 |
| மொத்தம் | | 51358 |

மேற்காணும் பிறப்பு இறப்பு விவரங்களை பதிவு 1–க்கு ரூ. 3/– வீதம் தனியார் கணனி நிறுவனம் மூலம் நகராட்சி கணனியில் பதிவு செய்வதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1,55,000/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/3510/2009)

**தீர்மானம் எண். 1581 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 7

மழையினால் சேதமடைந்த சாலைகளை தற்காலிகமாக நிவர்த்தி செய்வதற்கு குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பள்ளிரோட்டில் பழுதான தார்ச்சாலையில் பழுதுகள் சரி செய்வதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் நிர்வாக அனுமதி க.எண்.ஜி4/29704/10 நாள் 16.12.2010–ன்படி மதிப்பீடு ரூ.4.25 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 23.12.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.T.ராதாகிருஷ்ணன், ஒப்பந்தக்காரருக்கு 23.12.2010 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அடுத்தடுத்து பெய்த மழையினால் சாலையில் மேலும் சில பகுதிகள் சேதமடைந்துள்ளது. எனவே பணி தொடங்கி நடைபெற்று கொண்டிருக்கும் போது பொது மக்களின் கோரிக்கையை ஏற்று நகர்மன்றத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினரின் வேண்டுகோளின்படி மேலும் பழுதான சாலையின் சேதங்களை சரி செய்ய அறிவுறுத்தியதன் அடிப்படையில் மதிப்பீட்டை விட அதிகமான சேதங்கள் சரி செய்யப்பட்டது. அதன்படி திருத்திய மதிப்பீடு ரூ.5.15 இலட்சத்துக்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ.5.15 இலட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. மேலும் இதில் 2010–11–ம்

ஆண்டு வெள்ள நிவாரண நிதி ரூ.4.25 இலட்சம் போக, மீதம் உள்ள தொகை ரூ.90,000/—ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.குறிப்பு : மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

(ந.க.எண்.இ1/2008/2010)

**தீர்மானம் எண். 1582 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 8

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்காக 9 லிட்டர் கொள்ளளவுள்ள சிறிய குடிநீர் சுத்திகரிப்பு கருவி அமைப்பதற்கு ஆகும் உத்தேசச் செலவுத் தொகை ரூ.10,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.இ1/143/2011)

**தீர்மானம் எண். 1583 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 9

இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கொட்டில்பாட்டில் குப்பைகள் கொட்டும் இடத்தில் நிறைந்துள்ள குப்பைகளை JCB மூலம் அகற்றி இரண்டு Tipper Tractor மூலம் எடுத்து குழி தோண்டி மூடுவதற்கு ஒரு நாளைக்கு 10 மணி நேரம் வீதம் 3 நாட்கள் பணி செய்வதற்கு ரூ.50,000/— க்கு நகர்மன்ற தீர்மானம் எண். 1554 நாள் 23.12.2010—ன்படி மன்றம் ஒப்புதல் வழஙகியுள்ளது. மேலும் 5 நாட்கள் பணி செய்தால் தான் முழுமையாக குப்பைகளை எடுத்து குழி தோண்டி புதைக்க முடியும். எனவே ஒரு நாளைக்கு 10 மணி நேரம் வீதம் 5 நாட்கள் பணி செய்வதற்கு கூடுதலாக ரூ. 85,000/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,35,000/—க்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.இ1/6608/2010)

**தீர்மானம் எண். 1584 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

<u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2011 ஜனவரி திங்கள் 31.01.2011–ம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது

<u>**முன்னிலை**</u>
திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

<u>பொருள் எண் : 1</u>
இந்நகராட்சியில் புராதன நகர மேம்பாட்டுத் திட்டம் மற்றும் போக்குவரத்து மேலாண்மை திட்டம் ஆகியவற்றின்கீழ் கீழ்காணும் வரிசை எண். 2 மற்றும் 3–ல் உள்ள பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. வரிசை எண்.1–ல் உள்ள பணி ஏற்கனவே முடிவுற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | திட்டத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | உணவகக் கட்டடம் கட்டுதல் | 5.00 லட்சம் | புராதன நகர மேம்பாட்டுத் திட்டம் |
| 2 | பீச் சந்திப்பு முதல் காந்தி சந்திப்பு வரையில் மேற்கு பகுதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் ஓடையின் மேல் நடைபாதைக்குரிய Tiles மற்றும் கைப்பிடி அமைத்தல் மற்றும் காந்தி சந்திப்பு முதல் நகராட்சி அலுவலகம் வரை வடக்கு பகுதியில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் Tiles மற்றும் கைப்பிடியுடன் கூடிய நடைபாதை அமைத்தல். | 30.00 லட்சம் | புராதன நகர மேம்பாட்டுத் திட்டம் |
| 3 | பீச் சந்திப்பு முதல் காந்தி சந்திப்பு வரையில் கிழக்கு பகுதியில் நடைபாதைக்குரிய Tiles மற்றும் கைப்பிடி அமைத்தல் மற்றும் குளச்சல் பிரதான சாலையில் காந்தி சந்திப்பு முதல் நகராட்சி அலுவலகம் வரை தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் நடைபாதை அமைத்தல். | 33.00 லட்சம் | போக்குவரத்து மேலாண்மைத் திட்டம் |

மேற்காணும் 3 பணிகளும் CRZ-II பகுதியில் வருவதால் மாநில கடற்கரை மேலாண்மைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிகளுக்கு மாநில கடற்கரை மேலாண்மைக் குழுவின் ஒப்புதல் பெற கருத்துரு தயார் செய்ய வேண்டும். பொறியியல் பிரிவில் திட்டப்பணிகள், பொதுநிதிப் பணிகள், குடிநீர் பணிகள் மற்றும் தெருவிளக்குப் பணிகள் ஆகியவை அன்றாடம் கவனிக்க வேண்டியுள்ளதால் மேற்படி கருத்துருவினை தயார் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே கலந்தாலோசகர் ஒருவரை நியமனம் செய்யவும், அதற்கான சேவைக் கட்டணம் ரூ.20,000/– ஐ பொது நிதியிலிருந்து வழஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுலவலகக் குறிப்பு :</u>
(1) மேற்படி கருத்துருவினை உடனே தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று கலந்தாலோசகர் நியமனம் செய்துள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(2) மதுரையை சார்ந்த திரு.எம்.எம்.ஹனிபா, ஊரக மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி மைய இயக்குநர் அவர்களை நியமனம் செய்வதற்கும், அதற்கான சேவைக் கட்டணம் ரூ.20,000/– ஐ பொது நிதியிலிருந்து வழஙகவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.இ1/4585/2009)

**தீர்மானம் எண். 1585 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 2</u>

குளச்சல் நகராட்சியில் பொதுநிதி 2010–11–ல் மதிப்பீட்டு தொகை ரூ.5.50 இலட்சத்தில் காமராஜர் சாலையில் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல் பணிக்கு 25.01.2011 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.ஜாண்றோஸ் ஒப்பந்தக்காரர் | 10.23% மதிப்பீட்டை விட கூடுதல் (:ரூ.5,94,200/– ) |
| 2. | திரு.சி.செல்லநாடார் ஒப்பந்தக்காரர் | 4.98% மதிப்பீட்டை விட கூடுதல் (ரூ.5,65,880.30 ) |

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் இருவரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள, அதாவது மதிப்பீட்டைவிட 4.98% கூடுதல் விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் திரு.சி.செல்லநாடார் என்பவரின் விலை விகிதத்தை குறைத்து வழஙகக் கேட்டு மேற்படி ஒப்பந்ததாரருக்கு 27.01.2011 அன்று Negotiation கடிதம் வழஙகப்பட்டது. 27.01.2011 அன்று மேற்படி ஒப்பந்ததாரர் திரு.சி.செல்லநாடார் என்பவரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் கட்டுமான பொருட்களின் விலை விகிதம் மற்றும் ஆட்கள் கூலி ஆகியவை அரசு நிர்ணயித்த விலை விகிதத்தை விட பொதுச் சந்தையில் கூடுதலாக உள்ளதாகவும், தான் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டை விட 4.98% கூடுதலாக உள்ள விலை விகிதத்தை இதற்கு மேல் குறைக்க இயலாது எனவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே நகராட்சி பொறியியல் துணை விதி பிரிவு 2.7.2 –ன்படி மேற்படி ஒப்பந்ததாரர் தனது கடிதத்தில் கூறியுள்ள கருத்தினை ஏற்று மேற்படி பணிக்கு அவர் ஏற்கெனவே கோரியுள்ள மதிப்பீட்டை விட 4.98% கூடுதலாகவுள்ள விலைவிகிதத்தினை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

(1) மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண். 1571 நாள் 31.12.2010–ன்படி மன்றம் அனுமதி வழஙகியுள்ளது.

(2) நகராட்சி பொறியியல் துணை விதி பிரிவு 2.7.2.–ன்படி மேற்படி பணிக்கு இருவரில் குறைந்த விலை விகிதத்தில் மதிப்பீட்டை விட 4.98% கூடுதலான விலை விகிதத்தை ஏற்று, திரு.சி.செல்லநாடார், ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழஙகவும் மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

(ந.க.எண்.

5366/2010/இ1)

**தீர்மானம் எண். 1586 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 3</u>

குளச்சல் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–11–ல் மதிப்பீட்டு தொகை ரூ.2.50 இலட்சத்தில் KSSS காலனியில் அஙகன்வாடி கட்டிடம் கட்டும் பணிக்கு 25.01.2011 அன்று நடைபெற்ற மறு ஒப்பந்தப்புள்ளியில் (3–வது அழைப்பில்) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.பி.தஙகமணி, ஒப்பந்தக்காரர் | 4.77% மதிப்பீட்டை விட கூடுதல் (:ரூ.2,56,504/– ) |
| 2. | திரு.சி. சந்திரசேகர் ஒப்பந்தக்காரர் | 9.68% மதிப்பீட்டை விட கூடுதல் (ரூ. 2,68,515/– ) |

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் இருவரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள, அதாவது மதிப்பீட்டை விட 4.77% கூடுதல் விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் திரு.பி.தங்கமணி என்பவரின் விலை விகிதத்தை குறைத்து வழஙகக் கேட்டு மேற்படி ஒப்பந்ததாரருக்கு 27.01.2011 அன்று Negotiation கடிதம் வழஙகப்பட்டது. 27.01.2011 அன்று மேற்படி ஒப்பந்ததாரர் திரு.பி.தஙகமணி என்பவரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் கட்டுமான பொருட்களின் விலை விகிதம் மற்றும் ஆட்கள் கூலி ஆகியவை அரசு நிர்ணயித்த விலை விகிதத்தை விட பொதுச் சந்தையில் கூடுதலாக உள்ளதாகவும், தான் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டை விட 4.77% கூடுதலாக உள்ள விலை விகிதத்தை இதற்கு மேல் குறைக்க இயலாது எனவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே நகராட்சி பொறியியல் துணை விதி பிரிவு 2.7.2 –ன்படி மேற்படி ஒப்பந்ததாரர் தனது கடிதத்தில் கூறியுள்ள கருத்தினை ஏற்று மேற்படி பணிக்கு அவர் ஏற்கெனவே கோரியுள்ள மதிப்பீட்டை விட 4.77% கூடுதலாகவுள்ள விலைவிகிதத்தினை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

(1) மேற்படி பணி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணையில் மேற்படி பணிகளை செயல்படுத்த கால நிர்ணயம் செய்துள்ளபடியால் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2) நகராட்சி பொறியியல் துணை விதி பிரிவு 2.7.2.–ன்படி மேற்படி பணிக்கு இருவரில் குறைந்த விலை விகிதத்தில் மதிப்பீட்டை விட 4.77% கூடுதலான விலை விகிதத்தை ஏற்று, திரு.பி.தஙகமணி, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழஙகவும் மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1587 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 4

இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளிரோட்டிலிருந்து செக்காலத் தெருவுக்கு செல்லும் சாலையில் (ஹோட்டல் New முதல் வீட்டு எண்.27/3 வரை) வடிகால் ஓடை அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.50,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண்.1575 நாள் 31.12.2010–ன்மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழஙகியுள்ளது. அதன் அடிப்படையில் 25.01.2011 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.சேம்ராஜ், ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டை விட 0.34% குறைவு ( ரூ.46,718/– ) |
| 2. | திரு.பி.தஙகமணி, ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டை விட 0.14% குறைவு ( ரூ.46,814.65 ) |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.T.சேம்ராஜ் (0.14% மதிப்பீட்டை விட குறைவு ) என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவானது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரித்து பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.இ1/6824/10)

**தீர்மானம் எண். 1588 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 5</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5– கடிதம் எண்.CMA/ITC/10950/2008 நாள் 18.12.2010 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலி அவர்களின் மின்னஞ்சல் செய்தி நாள் 18.12.2010–ன்படி சிறப்பு சாலைத் திட்டம் மற்றும் அனைத்து வகையான திட்டப் பணிகள் சம்மந்தமான விபரஙகளை பணி நடைபெறும் பொழுது பணியின் ஒவ்வொரு நிலையிலும் உள்ள புகைப்படத்துடன் இணையத்தளத்தில் பதிவு செய்ய வேண்டியிருப்பதால் புகைப்படம் எடுத்து A4 size அளவில் Colour print எடுத்து பணியின் விபரஙகளை பதிவு செய்து நகல் எடுக்கவும், உத்தேச செலவுத் தொகை ரூ. 20,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழஙகலாம்.
(ந.க.எண்.இ1/6698/11 )

**தீர்மானம் எண். 1589 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 6</u>

இந்நகராட்சியில் மாதா காலனியில் அமைந்துள்ள புனித மேரி தொடக்கப்பள்ளியின் வடக்கு பக்கம் உள்ள குறுகலான தெருவில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் சிமெண்ட் தளம் அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.50,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.இ1/368/2011)

**தீர்மானம் எண். 1590 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 7</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 09.11.2010–ம் தேதிய சிறப்பு சாலைத் திட்டம் 2010–11 கூட்ட நடவடிக்கையில் தெரிவித்துள்ளபடி, சிறப்பு சாலைத் திட்டம் 2010–11 –க்கான கட்டுமான பொருட்களின் தரத்தினை சோதனை செய்ய கீழ்க்கண்ட பொருட்கள் வாஙகுவதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.50,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறற.

**<u>பொருட்களின் விவரம்</u>**

| | |
|---|---|
| 1 | Sieve analysis |
| 2 | Steel gauge plate |
| 3 | Cube moulds – 6 Nos |
| 4 | Leveling Instrument |
| 5 | Measuring Tape - 30 m - 1 No. |
| 6 | Measuring Tape - 15 m - 2 Nos |
| 7 | Steel tape - 5 Nos |

<u>அ.குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழஙகலாம்.
(ந.க.எண்.இ1/4936/10)

**தீர்மானம் எண். 1591 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 8</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாரி எண். TN.74 T.5508 –ன் தகுதி சான்றினை புதுப்பிப்பதற்காக மேற்படி வாகனத்தின் பழுதுகளை சரி செய்வதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.22,000/– க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1573 நாள் 31.12.2010–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 25.01.2011 அன்று ஒப்புந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| வ எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில். | மதிப்பீட்டு விகிதம் ( ரூ. 21,900/–) |
| 2 | மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில். | மதிப்பீட்டை விட 4.57% கூடுதல். ( ரூ.22,900/–) |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் என்பவரின் மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙகுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.எச்1/2913/09)

**தீர்மானம் எண். 1592 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 9

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாரி எண். TN.74 Z.8931 –ன் ரேடியேட்டர் மற்றும் வைபர் மோட்டார் ஆகியவை சரி செய்வதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.15,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1561 நாள் 31.12.2010–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 28.01.2011 அன்று ஒப்புந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| வ எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | மதிப்பீட்டை விட 0.66% குறைவு. ( ரூ.14,900/–) |
| 2 | M/s.KSSS ஆட்டோமொபைல்ஸ் நாகர்கோவில். | மதிப்பீட்டை விட 0.06% குறைவு ( ரூ.14.990/–) |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.66% குறைவாக கொடுத்துள்ள M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.எச்1/2913/09)

**தீர்மானம் எண். 1593 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே.ஜேசையா
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி